நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 348/2025

## P.W.6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோபால கிருஷ்ணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | சுப்ரமணி |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW6** |
| வயது | : | 36 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.41PM

1. நான் ராக்கியப்ப கவுண்டர் தோட்டத்தில்குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். குஞ்சப்பன் என்பவர் சாந்தா என்பவரை சத்தம்போட்டுக்கொண்டிருந்தார். அதுசம்மந்தமாக வழக்கு பதிவுசெய்தார்கள் என்று கேள்விப்பட்டேன்.

2. சுமார் 4–5 நாட்கள் கழித்து போலீசார் மதியம் 4 மணியளவில் சம்பவயிடம் வந்தார்கள். என்னுடன் ராதாமணி என்பவர் சம்பவயிடத்தில் இருந்தார். எங்கள் இருவர் முன்னிலையில் போலுசார் சண்டை நடந்தஇடத்தை படம் வரைந்து எழுதி படித்து காட்டிய பிறகு கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **(பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் எதிர் தரப்பினருக்கும் உரிமையியல் வழக்கு நிலுவையில் இருப்பது பற்றி கேள்விப்பட்டேன். அ.சா.2 சின்ராஜ் எனது உறவினர் என்றால் பழக்கம் வழக்கம் உள்ள நபர். அவர் எனது வீட்டில் இருந்து அரை கிலோமீட்டர் தூரத்தில் குடியிருக்கிறார். போலீசார் என்னிடம் எழுதிய தாளில்தான் கையெழுத்து வாங்கினார்கள்.

2. அ.சா.2 எனது உறவினர் என்பதால் தற்போது நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்திருந்தால் சாட்சி பட்டியலில் சேர்த்திருப்பார்கள் என்றாலும் பார்க்காததால்தான் என்னை கேள்விப்பட்ட சாட்சியாக சேர்த்துள்ளனர் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றாலும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.45 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**